முழுப் பதிப்புரிமையுடையது.

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

## மட்டம் I பரீட்சை – 2022 யூலை

## (101) நிதிக் கணக்கீடு

(Financial Accounting)

2022-08-27
காலை
[9.00 – 12.00]

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள் (கவனமாக வாசிக்கவும்):**

பக்கங்கள் : 10
வினாக்கள் : 06

(1) ***காலம் :*** *03 மணித்தியாலம்*

(2) ***எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***

(3) *உங்களுக்குத் தரப்பட்டுள்ள* ***விடைப்புத்தகத்தில்*** *நீங்கள் விண்ணப்பித்த அதே* ***ஒரு மொழியிலேயே விடையளித்தல்*** *வேண்டும்.*

(4) *சகல செய்முறைகளையும் கணிப்புகளையும் சமர்ப்பிக்கவும். நீங்கள் மேற்கொண்ட எடுகோள்கள் ஏதாவது இருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*

(5) *நிரற்படுத்தப்படாத கணிப்பான்களின் பாவனை* ***மாத்திரம்*** *அனுமதிக்கப்பட்டுள்ளது.*

(6) *வரைவிலக்கணங்களுடன்கூடிய* ***செயல் வினைச்சொல் செவ்வை நிரல்*** *இணைக்கப்பட்டுள்ளது. OTQs தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒரு* ***வினைச்சொல்லைக்*** *கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள் செயல் வினைச்சொல் செவ்வை நிரலில் தரப்பட்ட வினைச்சொல்* ***வரைவிலக்கணத்தின்*** *அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(7) *100 புள்ளிகள்.*

---

## <u>பகுதி A</u>

**நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)**

(மொத்தம் 40 புள்ளிகள்)

### வினா 01

*இல.* ***1.1*** *இலிருந்து* ***1.10*** *வரையிலான வினாக்களுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க. தெரிவு செய்த விடையின் இலக்கத்தை உமது விடைப்புத்தகத்தில் வினாவுக்குரிய இலக்கத்துடன் எழுதுக.*

**1.1** கீழ்வருவனவற்றுள் நிதித் தகவல்களின் ஒரு தரம்சார் (qualitative) பண்பாக இருப்பது எது?

(1) தொடர்ந்தியங்கும் தன்மை
(2) தொடர்புடைமை
(3) அட்டுறு அடிப்படை
(4) வரலாற்றுக் கிரயம்

**1.2** கீழ்வருவனவற்றுள் ஒரு முதன்மைப் பதிவேடு **அல்லாதது** எது?

(1) காசேடு
(2) கொள்வனவு நாளேடு
(3) பொதுப் பேரேடு
(4) விற்பனை நாளேடு

**1.3** நிதிக் கணக்கீட்டின் சரியான செயன்முறையைக் கீழ்வருவனவற்றிலிருந்து தெரிவுசெய்க :

(1) உள்ளீடு ⟶ வெளியீடு ⟶ செயன்முறை
(2) வெளியீடு ⟶ செயன்முறை ⟶ உள்ளீடு
(3) உள்ளீடு ⟶ செயன்முறை ⟶ வெளியீடு
(4) வெளியீடு ⟶ உள்ளீடு ⟶ செயன்முறை.

**1.4** **வரையறுக்கப்பட்ட XYZ** கம்பனியின் 2022 மார்ச் 31 இல் காசேட்டின் வரவு (debit) மீதி ரூபா 225,000/- ஆக இருந்ததுடன் அது அந்தத் தேதியிலான வங்கிக் கூற்றின் மீதியிலிருந்து வேறுபட்டுக் காணப்பட்டது. 2022 மார்ச் 31 இல் உள்ளவாறு, கொடுப்பனவுக்காக சமர்ப்பிக்கப்படாத காசோலைகளின் பெறுமதி ரூபா 36,000/- ஆக இருந்ததுடன் வங்கியினால் அறவிடப்பட்ட வங்கிக் கட்டணம் ரூபா 5,000/- ஆனது காசேட்டில் கவனத்திற் கொள்ளப்படவில்லை.

2022 மார்ச் 31 இலான வங்கிக் கூற்றில் காட்டப்படும் மீதியானது :

(1) ரூபா 256,000/-. (2) ரூபா 184,000/-. (3) ரூபா 194,000/-. (4) ரூபா 266,000/-.

**1.5** **ரண்சி டிரேடர்ஸ்** ஆனது தனது வணிகத்தை விரிவாக்குவதற்காக வங்கிக் கடனொன்றைப் பெற்றுக் கொண்டது. இந்த ஊடுசெயலைப் பதிவு செய்வதற்கான சரியான இரட்டைப் பதிவு :

(1) வங்கிக் கடன் கணக்கு – வரவு, காசுக் கணக்கு – செலவு.

(2) வங்கிக் கடன் கணக்கு – வரவு, மூலதனக் கணக்கு – செலவு.

(3) காசுக் கணக்கு – வரவு, வங்கிக் கடன் கணக்கு – செலவு.

(4) காசுக் கணக்கு – வரவு, மூலதனக் கணக்கு – செலவு.

**1.6** ***ரண்மீரா*** என்பவர் தனது தனியுடமை வியாபாரத்திற்கு, மேலதிக மூலதனமாக ரூபா 1,000,000/- இனை காசாக முதலீடு செய்துள்ளார்.

மேற்படி ஊடுசெயல் தொடர்பில் கணக்கீட்டுச் சமன்பாட்டிற்கான சரியான தாக்கத்தைக் கீழ்வருவனவற்றிலிருந்து தெரிவுசெய்க :

| | சொத்துகள் (ரூபா) | = | மூலதனம் (உரிமையாண்மை) (ரூபா) | + பரிப்புக்கள் (ரூபா) |
|---|---|---|---|---|
| (1) | + 1,000,000 | = | | + 1,000,000 |
| (2) | + 1,000,000 | = | + 1,000,000 | |
| (3) | - 1,000,000 | = | - 1,000,000 | |
| (4) | - 1,000,000 | = | | - 1,000,000 |

**1.7** கடனடிப்படையில் கொள்வனவாளர் ஒருவரால் கொள்வனவு செய்யப்பட்ட பொருள்களின் திரும்பல்களுக்காக விற்பனையாளரால் பயன்படுத்தப்படும் சரியான மூல ஆவணத்தைத் தெரிவு செய்க :

(1) கொள்வனவுக் கட்டளை (2) நாட்குறிப்பேட்டு உறுதிச்சீட்டு

(3) வரவுக் (debit) குறிப்பு (4) செலவுக் (credit) குறிப்பு.

**1.8** கீழுள்ள தகவல்கள் 2022 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான தனியுடமை வியாபாரமான **ரோஸ் டிரேடர்ஸ்** இன் ஏடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

| | **ரூபா** |
|---|---|
| 2021 ஏப்ரல் 01 இல் மூலதனம் | 2,000,000 |
| ஆண்டின்போது உரிமையாளரால் மேற்கொள்ளப்பட்ட எடுப்பனவுகள் | 300,000 |
| 2022 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலாபம் | 480,000 |
| 2022 மார்ச் 31 இல் பரிப்புக்கள் | 600,000 |

மேற்படி தகவல்களின் அடிப்படையில், 2022 மார்ச் 31 இலான மொத்தச் சொத்துகள் :

(1) ரூபா 2,180,000/-.     (2) ரூபா 2,600,000/-.

(3) ரூபா 2,780,000/-.     (4) ரூபா 3,380,000/-.

**1.9** கீழ்வரும் ஊடுசெயல்களில் சொத்துகளில் குறைப்பை (decrease) ஏற்படுத்தும் ஊடுசெயல் எது?

(1) அலுவலகப் பாவனைக்காக காசு அடிப்படையில் ரூபா 200,000/- இற்கு கணினி ஒன்று கொள்வனவு செய்யப்பட்டது.

(2) வணிக உரிமையாளர் தனது தனிப்பட்ட பாவனைக்காக எடுத்துக்கொண்ட பொருள்களின் கிரயம் ரூபா 65,000/- ஆகும்.

(3) ரூபா 100,000/- தொகையானது கடன்பட்டோரிடமிருந்து சேகரிக்கப்பட்டது.

(4) ரூபா 250,000/- கிரயம் பெறுமதியான இருப்புகள் ரூபா 400,000/- இற்கு கடனுக்கு விற்பனை செய்யப்பட்டன.

**1.10** "நிதிக் கூற்றுக்கள், எதிர்காலத்தில் ஒரு நிறுவனம் தொடர்ந்தும் இயங்கும் என்ற எடுகோளின் அடிப்படையில் தயாரிக்கப்படுகின்றன."

மேற்படி கூற்றுடன் தொடர்புடைய கணக்கீட்டு எண்ணக்கரு :

(1) தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு     (2) அட்டுறு எண்ணக்கரு

(3) உரிம (அலகுசார்) எண்ணக்கரு     (4) காலாந்தர எண்ணக்கரு

*கீழே **1.11** தொடக்கம் **1.15** வரையில் தரப்பட்டுள்ள ஒவ்வொரு கூற்றும் **சரியானதா** அல்லது **தவறானதா** எனக் குறிப்பிடுக. உமது விடையை (சரியானது / தவறானது) உரிய வினா இலக்கத்துடன் விடைப்புத்தகத்தில் குறிப்பிடுக..*

**1.11** அலுவலகப் பாவனைக்காக கடனடிப்படையில் மேற்கொள்ளப்படும் அலுவலக உபகரணமொன்றின் கொள்வனவு, பொது நாட்குறிப்பேட்டில் பதிவு செய்யப்படுகிறது.

**1.12** ஒரு வணிகத்தின் அனைத்துக் கொடுக்கல் வாங்கல்களும் நிகழ்வுகளும் பணத்தில் அளவிடக் கூடியதாக இருக்கிறதா அல்லது இல்லையா என்பதைப் பதிவு செய்வது அவசியமானதாகும்.

**1.13** பொதுப் பேரேடு என்பது நிதிக் கூற்றுக்களின் தொகுதியின் ஒரு கூறு (component) ஆகும்.

**1.14** கிரயம் அல்லது நிகர தேறத்தக்க பெறுமதியில் (NRV) எது குறைந்ததோ அந்தப் பெறுமதியில் தொக்குகள் மதிப்பிடப்படுவது முன்னெச்சரிக்கை கணக்கீட்டு எண்ணக்கருவுக்கான (prudence accounting concept) ஓர் உதாரணமாகும்.

**1.15** உரிமையாண்மை என்பது வருமானக் கூற்றுடன் நேரடியாகத் தொடர்புபட்ட ஒரு மூலகம் (element) ஆகும்.

**1.16** தொடக்கம் **1.20** *வரையுள்ள வினாக்களுக்கான விடைகளை உங்களது விடைப்புத்தகத்திலே உரிய வினா இலக்கத்திற்கு எதிரே எழுதுக.*

**1.16** வணிக உரிமமொன்றில் (நிறுவனமொன்றில்) பயன்படுத்தப்படும் இரண்டு (02) வகையான மூல ஆவணங்களைக் குறிப்பிடுக.

**1.17** வணிக ஒழுக்கநெறி (Business ethics) ஏன் முக்கியமானது என்பதற்கான இரண்டு (02) காரணங்களை நிரற்படுத்துக.

**1.18** "செலவு (expense)" எனும் பதத்தை வரைவிலக்கணப்படுத்துக.

**1.19** பொதுக் கணக்கீட்டு மென்பொருளுக்கான இரண்டு (02) உதாரணங்களைக் குறிப்பிடுக.

**1.20** **மஹேலி ஸ்டோர்ஸ்** 2020 ஏப்ரல் 01 இல் ரூபா 800,000/- இற்கு இயந்திரம் ஒன்றைக் கொள்வனவு செய்தது. வணிகத்தின் கொள்கையானது ஆண்டிற்கு 20% இல் குறைந்து செல்லும் மீதி முறையைப் பயன்படுத்தி இயந்திரத்தைத் தேய்மானம் செய்வதாகும்.

2022 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான தேய்மானக் கட்டணத்தைக் கணிக்குக.

(02 புள்ளிகள் வீதம், மொத்தம் 40 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

## பகுதி B

(மொத்தம் 40 புள்ளிகள்)

## வினா 02

(A) தனியுடமை வியாபாரம் ஒன்றின் கணக்கீட்டுச் சமன்பாட்டிற்கான, ஐந்து (5) ஊடுசெயல்களின் தாக்கம் கீழே உங்களுக்குத் தரப்பட்டுள்ளன :

| | சொத்துகள் | | | | | | | = | உரிமை யாண்மை (மூலதனம்) | + | பரிப்புக்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | அலுவலக உபகரணம் | + | தொக்கு | + | வியாபாரக் கடன்பட்டோர் | + | காசு | | | | வியாபாரக் கடன் கொடுத்தோர் |
| (1) | | | | | | | + 1,200,000 | = | + 1,200,000 | | |
| (2) | | | + 150,000 | | | | (150,000) | = | | | |
| (3) | | | | | | | (40,000) | = | (40,000) | | |
| (4) | | | (65,000) | | + 80,000 | | | = | + 15,000 | | |
| (5) | + 100,000 | | | | | | | = | | | + 100,000 |

**நீங்கள் செய்ய வேண்டியது :**

மேலே (1) தொடக்கம் (5) வரையுள்ள கணக்கீட்டுச் சமன்பாட்டின் ஒவ்வொரு வரிசைக்கும் ஏற்புடையதான சாத்தியமான ஊடுசெயலை **இனங்காண்க.** (05 புள்ளிகள்)

(B) **காவிந்து ஸ்டோர்ஸ்** இன் 2022 மார்ச் 31 இலான வங்கிக் கூற்றானது ரூபா 390,000/- என்ற சாதகமான மீதியைக் காட்டியுள்ள அதே வேளை காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கானது ரூபா 560,000/- என்ற வரவு (debit) மீதியை (சாதகமான) காட்டியது. இந்த வித்தியாசத்திற்கான காரணங்களாக கீழ்வருவன இனங்காணப்பட்டிருந்தன :

(1) வங்கியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கடனுக்கான, ஒரு கடன் தவணைக் கொடுப்பனவாக ரூபா 120,000/- இனை வங்கி வசூலித்திருந்தது. இது காசேட்டில் பதிவு செய்யப்படவில்லை.

(2) முன்னைய மாத வங்கிக் கட்டணத்தில் மேலதிகமாக வசூலிக்கப்பட்டிருந்த தொகையைச் சரி செய்வதற்காக வங்கியானது ரூபா 5,000/- செலவுப் பதிவு (credited) செய்து திருத்தம் செய்திருந்தது. இது காசேட்டில் பதிவு செய்யப்படவில்லை.

(3) வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 180,000/- பெறுமதியான ஒரு காசோலை 2022 மார்ச் 31 ஆந் திகதி வரை தேறியிருக்கவில்லை.

(4) 2022 மார்ச் 30 இல் **காவிந்து** இனால் வழங்கப்பட்ட ரூபா 125,000/- பெறுமதியான காசோலை 2022 மார்ச் 31 வரை கொடுப்பனவுக்காக வங்கியில் சமர்ப்பிக்கப்படவில்லை.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

கீழ்வருவனவற்றைத் **தயாரிக்குக** :

(a) சீராக்கப்பட்ட காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கு (காசேடு) (03 புள்ளிகள்)

(b) 2022 மார்ச் 31 இலான வங்கி கணக்கிணக்கக் கூற்று. (02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 03

**லஸ்ஸன பொட்ஸ்** என்பது பூச்சாடிகளைத் தயாரிப்பதில் ஈடுபட்டுள்ள ஒரு நிறுவனமாகும். கீழ்வரும் தகவல்கள் 2022 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **லஸ்ஸன பொட்ஸ்** நிறுவனத்தின் ஏடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டவை ஆகும் :

| விபரம் | ரூபா |
|---|---|
| மூலப்பொருள் கொள்வனவு | 3,800,000 |
| மூலப்பொருள்கள் உள்வந்த வண்டிக்கூலி | 350,000 |
| தொழிற்சாலை முகாமையாளரின் சம்பளம் | 420,000 |
| நேர் கூலிகள் - உற்பத்திப் பணியாளர்கள் | 700,000 |
| மின்சாரம் | 620,000 |
| நீர் | 400,000 |
| தொழிற்சாலைக் காப்புறுதி | 125,000 |
| தேய்மானம் - பொறி மற்றும் இயந்திரம் | 250,000 |
| தேய்மானம் - மோட்டார் லொறி | 120,000 |

கீழ்வரும் மேலதிகத் தகவல்களும் உங்களுக்குத் தரப்பட்டுள்ளன :

(1) தொக்குகள் கீழ்வருமாறு மதிப்பிடப்படுகின்றன: *(ரூபா)*

| விபரம் | 2021 ஏப்ரல் 01 இல் | 2022 மார்ச் 31 இல் |
|---|---|---|
| மூலப்பொருள் (கிரயத்தில்) | 800,000 | 850,000 |
| புத்துருவாகும் வேலைகள் (முதன்மைக் கிரயத்தில் மதிப்பிடப்பட்டது) | 235,000 | Nil |

(2) கீழ்வரும் செலவினங்கள் பின்வருமாறு பகிரப்பட வேண்டும் :

| செலவினம் | தொழிற்சாலை | அலுவலகம் |
|---|---|---|
| மின்சாரம் | 80% | 20% |
| நீர் | 90% | 10% |

(3) மோட்டார் லொறியானது தொழிற்சாலைக்கு மூலப்பொருள்களை விநியோகம் செய்வதற்காக மாத்திரம் பயன்படுத்தப்படுகிறது.

(4) நேர் கூலிகளைத் தவிர, தயாரிக்கப்படும் ஒவ்வொரு பூச்சாடிக்கும் உற்பத்திப் பணியாளர்களுக்கு ஊக்கத்தொகை ரூபா 25/- உரித்துடையதாகும். ஆண்டின் காலப்பகுதியில் தயாரிக்கப்பட்ட பூச்சாடிகளின் மொத்த எண்ணிக்கை 10,000 ஆகும்.

(5) தயாரிக்கப்படும் பூச்சாடிகள், உற்பத்திக் கிரயத்தில் 20% இலாப எல்லை வைத்து, வியாபாரப் பிரிவுக்கு மாற்றப்படுகின்றன.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

2022 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **லஸ்ஸன பொட்ஸ்** நிறுவனத்தின் உற்பத்திக் கிரயக் கூற்றினை (உற்பத்திக் கணக்கு) **தயாரிக்குக.** (10 புள்ளிகள்)

## வினா 04

**துஷ்ரா டிரேடர்ஸ்** என்பது ஆரம்ப மூலதனமாக ரூபா 7,000,000/- இனை காசாக முதலீடு செய்து 2021 ஏப்ரல் 01 இல் **முரளி** என்பவரால் ஆரம்பிக்கப்பட்ட ஒரு தனியுடமை வியாபாரமாகும்.

கீழ்வரும் மேலதிக தகவல்களும் வழங்கப்பட்டுள்ளன :

(1) 2022 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கு (காசேடு) கீழ்வருமாறு :

**காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கு (காசேடு)**

| | வரவு (ரூபா) | | செலவு (ரூபா) |
|---|---|---|---|
| ஆரம்ப மூலதன முதலீடு | 7,000,000 | வியாபாரக் கடன்கொடுத்தோருக்கான கொடுப்பனவுகள் | 1,800,000 |
| காசு விற்பனை | 3,200,000 | காசு கொள்வனவுகள் | 1,200,000 |
| வியாபாரக் கடன்பட்டோரிடமிருந்தான பெறுவனவுகள் | 2,400,000 | மின்சாரம் மற்றும் நீர் | 300,000 |
| | | அலுவலக வாடகை | 275,000 |
| | | இயந்திரமொன்றின் கொள்வனவு (2021 அக்டோபர் 01 இல் கொள்வனவு செய்யப்பட்டது) | 2,500,000 |
| | | சம்பளங்களும் கூலிகளும் | 2,100,000 |
| | | மீதி மு.கொ.செ. | 4,425,000 |
| | **12,600,000** | | **12,600,000** |
| மீதி மு.கொ.வ. | 4,425,000 | | |

(2) 2022 மார்ச் 31 இல், கணக்கேடுகளில் கீழ்வரும் மீதிகள் காணப்பட்டன :

| | ரூபா |
|---|---|
| வியாபாரக் கடன்பட்டோர் | 950,000 |
| வியாபாரக் கடன்கொடுத்தோர் | 940,000 |
| செலுத்த வேண்டிய மின்சார மற்றும் நீர் கட்டணங்கள் | 29,000 |

(3) வியாபாரத்தின் கொள்கையானது நேர்கோட்டு அடிப்படையில் கிரயத்தில் ஆண்டிற்கு 20% இல் இயந்திரங்கள் மீது பெறுமானத்தேய்வு செய்வதாகும்.

(4) 2022 மார்ச் 31 இல் எவ்வித தொக்குகளும் காணப்படவில்லை.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

2022 மார்ச் 31 இலான **துஷ்ரா டிரேடர்ஸின்** பரீட்சை மீதியைத் **தயாரிக்குக.** (10 புள்ளிகள்)

## வினா 05

புறக்கோட்டையில் அமைந்துள்ள **அஸார் டிரேடர்ஸ்** ஆனது திரைச்சீலைகளை விற்பனை செய்யும் ஒரு வியாபார நிறுவனமாகும். கணக்குகள் நிறைவேற்றுநரால் தயாரிக்கப்பட்ட **அஸார் டிரேடர்ஸின்** 2022 மார்ச் 31 இலான பரீட்சை மீதி இணங்கவில்லை. இருப்பினும், வித்தியாசம் ரூபா 45,000/- ஆனது தொங்கற் கணக்கிற்கு செலவுப் பதிவு (credited) செய்யப்பட்டு, வரைவு நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டன. **அஸார் டிரேடர்ஸ்,** வியாபார வருமதிகள் மற்றும் வியாபார சென்மதிகளுக்கான கட்டுப்பாட்டுக் கணக்குகளைப் பேணுகிறது.

பின்னர், கீழ்வரும் வழுக்கள் இனங்காணப்பட்டன :

(1) பயணச் செலவுகளுக்காகச் செலுத்தப்பட்ட ரூபா 9,000/- ஆனது சம்பளங்கள் மற்றும் கூலிகள் கணக்கிற்கு வரவுப் பதிவு (debited) செய்யப்பட்டிருந்தது. இது காசேட்டில் சரியாகப் பதிவு செய்யப்பட்டிருந்தது.

(2) ரூபா 129,000/- பெறுமதியான காசு விற்பனை விலைப்பட்டியல் (invoice) காசேட்டில் சரியாகப் பதிவுசெய்யப்பட்ட போதிலும், இது தொடர்பில் விற்பனைக் கணக்கில் பதிவு செய்யப்படவில்லை.

(3) காப்புறுதித் தவணைக் கட்டணக் கொடுப்பனவான ரூபா 56,000/- ஆனது காசேட்டில் மாத்திரம் பதிவு செய்யப்பட்டிருந்தது.

(4) விற்பனைத் திரும்பல் நாளேட்டின் மொத்தமானது ரூபா 8,000/- இனால் குறைத்துப் பதியப்பட்டிருந்தது.

(5) வங்கியால் மேலதிகப்பற்று வட்டியாக அறவிடப்பட்ட வட்டிச் செலவினம் ரூபா 21,500/- ஆனது வட்டி வருமானக் கணக்கிற்கு செலவுப் பதிவு (credited) செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இது காசேட்டில் சரியாகப் பதிவு செய்யப்பட்டிருந்தது.

(6) ரூபா 120,000/- இற்கு கொள்வனவு செய்யப்பட்ட கணினியொன்றின் கிரயமானது கணினிப் பராமரிப்புக் கணக்கிற்கு வரவுப் பதிவு (debited) செய்யப்பட்டிருந்த அதே வேளை அது காசேட்டில் சரியாகப் பதிவு செய்யப்பட்டிருந்தது.

(7) தொலைபேசிச் செலவினம் ரூபா 15,000/- ஆனது தொலைபேசிச் செலவினக் கணக்கில் இரு முறை வரவுப் பதிவு (debited) செய்யப்பட்டிருந்த அதே வேளை அதற்கான செலவுப் பதிவானது சரியாகப் பதிவு செய்யப்பட்டிருந்தது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

கீழ்வருவனவற்றைத் **தயாரிக்குக** :

(a) மேலுள்ள வழுக்களைத் திருத்துவதற்கான நாட்குறிப்பேட்டுப் பதிவுகள். (07 புள்ளிகள்)

(b) தொங்கல் கணக்கு. (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

## <u>பகுதி C</u>

(மொத்தம் 20 புள்ளிகள்)

## வினா 06

**திமிர டிரேடர்ஸ்** என்பது **திமிர** என்பவருக்குச் சொந்தமான ஒரு தனியுடமை வியாபாரமாகும். 2022 மார்ச் 31 இலான **திமிர டிரேடர்ஸின்** பரீட்சை மீதி கீழ்வருமாறு :

**திமிர டிரேடர்ஸ்**

**2022 மார்ச் 31 இலான பரீட்சை மீதி** *(ரூபா '000)*

| விபரம் | வரவு | செலவு |
|---|---|---|
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் - கிரயத்தில்: | | |
| இயந்திரம் | 2,000 | |
| தளபாடமும் பொருத்துகளும் | 800 | |
| 2021 ஏப்ரல் 01 இல் திரள் தேய்மானம்: | | |
| இயந்திரம் | | 400 |
| தளபாடமும் பொருத்துகளும் | | 320 |
| விற்பனைகள் | | 202,000 |
| கொள்வனவுகள் | 124,000 | |
| கொடுத்த கழிவு | 4,000 | |
| வியாபார வருதிகள் | 20,200 | |
| வியாபார சென்மதிகள் | | 3,000 |
| காசுக் கையிருப்பு | 95 | |
| வங்கி மேலதிகப்பற்று | | 1,050 |
| 2021 ஏப்ரல் 01 இல் தொக்கு | 13,950 | |
| மின்சாரம் | 3,250 | |
| சம்பளங்களும் கூலிகளும் | 42,000 | |
| மேலதிகப்பற்று வட்டி | 500 | |
| வங்கிக் கடன் வட்டி | 1,100 | |
| பயணங்களும் போக்குவரத்துகளும் | 7,200 | |
| அலுவலக வாடகை | 2,800 | |
| மூலதனக் கணக்கு – 2021 ஏப்ரல் 01 இல் | | 7,625 |
| வங்கிக் கடன் | | 7,500 |
| **மொத்தம்** | **221,895** | **221,895** |

கீழ்வரும் மேலதிகத் தகவல்களும் வழங்கப்பட்டுள்ளன :

(1) 2022 மார்ச் 31 இல் கிரயத்தில் மதிப்பிடப்பட்ட இறுதித் தொக்கு ரூபா 8,250,000/-.

(2) 2021 ஏப்ரல் 01 இல், **திமிர**வுக்குச் சொந்தமான ஒரு லொறி வியாபாரத்திற்கு மாற்றப்பட்டதுடன் 2021 ஏப்ரல் 01 இல் லொறியின் மதிப்பு (value) ரூபா 1,000,000/- ஆகும். எவ்வாறாயினும், இது கணக்கேடுகளில் பதிவு செய்யப்படவில்லை.

(3) வியாபாரத்தின் கொள்கையானது கிரயத்தில் நேர்கோட்டு அடிப்படையில் கீழ்வருமாறு தேய்மானஞ் செய்வதாகும் :

| | | |
|---|---|---|
| இயந்திரம் | : | ஆண்டிற்கு 10% |
| தளபாடமும் பொருத்துகளும் | : | ஆண்டிற்கு 20% |
| மோட்டார் வாகனங்கள் | : | ஆண்டிற்கு 25% |

(4) 2021 ஏப்ரல் 01 இல், **திமிர டிரேடர்ஸ்** ஆனது அலுவலக வளாகத்திற்கான ஒரு புதிய வாடகை உடன்படிக்கையைச் செய்து கொண்டது. புதிய உடன்படிக்கையின் பிரகாரம், மாதாந்த வாடகை ரூபா 200,000/- ஆகவுள்ளதுடன் 2022 ஏப்ரல் மற்றும் மே மாதங்களுக்கான வாடகையும் ஆண்டின் காலப்பகுதியில் செலுத்தப்பட்டுள்ளது.

(5) 2022 மார்ச் மாதத்திற்கான மின்சாரக் கட்டணம் ரூபா 85,000/- ஆனது 2022 மார்ச் 31 வரை செலுத்தப்படவில்லை.

(6) **வரையறுக்கப்பட்ட ABC (தனியார்) கம்பனி**யிடமிருந்து வருமதியாகக் காணப்பட்ட ரூபா 200,000/- இனை அறவிட முடியாக் கடனாகப் பதிவழிப்புச் செய்ய **திமிர** தீர்மானித்திருந்தார்.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

கீழ்வருவனவற்றைத் **தயாரிக்குக** :

(a) 2022 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முற்றடக்க வருமானக் கூற்று (11 புள்ளிகள்)

(b) 2022 மார்ச் 31 இலான நிதி நிலைக் கூற்று (09 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| அறிவு (1) | விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல் | **வரைக (Draw)** | வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல் |
| | | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல் |
| | | **கூறுக/ குறிப்பிடுக(State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல் |
| | | **அடையாளங்காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல் |
| | | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| முற்றடக்கம் (2) | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும் | **ஏற்பிசைவு செய்க (Recognize)** | அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| | | **பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret)** | விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல் |
| | | **விளக்குக (Describe)** | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | **விபரிக்குக (Explain)** | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | **பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define)** | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| பிரயோகம் (3) | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும் | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile)** | வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல் |
| | | **வரைக (Graph)** | வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல் |
| | | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல் |
| | | **தயாரிக்குக (Prepare)** | குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல் |
| | | **எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate)** | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate)** | கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல் |
| | | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| பகுப்பாய்வு (4) | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | **தொடர்பாடுக(Communicate)** | தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல் |
| | | **சுருக்கமாகக் குறிப்பிடுக(Outline)** | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | **வேறுபடுத்துக (Contrast)** | வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss)** | விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல் |
| | | **வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் |
| | | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல் |